முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

முன்னிலை :- திருமதி. K. பாரதி M.L.,

முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 29 ம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண்.10/2007

(CNR.No. TNVP02-000004-2007)

செல்வி ...வாதி

//எதிர்//

1. ரங்கநாயகி (இறந்துவிட்டார்)
2. ராஜவேணி
3. பெரியண்ணன்
4. மல்லிகா
5. விஜயா
6. தமிழ்மாறன் ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு 16.02.2007 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 17.07.2026 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.A.K.A.செல்வராஜன், அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டும், 3 ம் பிரதிவாதி

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.S.சுப்ரமணியன், அவர்கள் முன்னிலையாகியும், 4ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சண்முகம், அவர்கள் முன்னிலையாகியும், 5ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.முகில்வண்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 6ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M..சக்கரபாணி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..........

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கு "A" மற்றும் "B" அட்டவணைச் சொத்துக்களில் வாதிக்கு உண்டான 1/6 பாகத்தை பிரித்துக்கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், பிரதிவாதிகள் வாதிகளுக்கு உண்டான பாகத்தை பிரித்துக்கொடுக்க மறுத்தால் ஆணையரை நியமித்து நில இளப்பம் கட்டி 6 சம பாகங்களாக பிரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவும், 3 மற்றும் 6 பிரதிவாதிகள், வாதிக்கு எதிர்கால மகசூல் ஆதாயத்தை கட்டளை 20 விதி 18ன் படி தனி மனுவில் நிர்ணயம் செய்துக்கொள்ள உத்தரவிடவும், மற்றும் செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல்.

2. வழக்குரையின் சுருக்கம்:-

சின்னராசுக்கவுண்டர் என்பவருக்கு 1ம் பிரதிவாதி மனைவி. வாதியும், 2, 4 மற்றும் 5 பிரதிவாதிகளும் மகள்கள். 3 மற்றும் 6 பிரதிவாதிகள் சின்னராசுக்கவுண்டரின் மகன்கள். சின்னராசுக்கவுண்டரின் சகோதரர் பெருமாள் என்பவரின் மனைவி செங்கேணி தாக்கல் செய்த அ.வ.எண்.127/1953 என்ற வழக்கில் ஏற்பட்ட சமரச தீர்ப்பாணையில் தாவா "A" அட்டவணையில் 2 முதல் 5, 8, 14, 15 27 முதல் 30 மற்றும் 38 இனச்சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டருக்கு "B" அட்டவணைச் சொத்துக்களாக ஒதுக்கப்பட்டது. மேற்படி சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டர் 19.12.1990 அன்று இறக்கும் வரை அனுபவித்து வரப்பட்டது. சின்னராசுக்கவுண்டர் உயிருடன் இருந்தபோது 3ம் பிரதிவாதி குடும்ப மேலாளர் என்ற அடிப்படையில் வழக்குச்சொத்துக்களை நிர்வகித்து வந்தார். மேற்படி சொத்துக்கள் நீர்வளம் உடைய செழிப்பான நிலங்கள் என்பதால் அவற்றிலிருந்து வந்த வருமானத்தைக்கொண்டு 3ம் பிரதிவாதியின் பெயரில் தாவா "A" அட்டவணைச் சொத்தில் உள்ள 6, 7, 9, 32 முதல் 34, 42 முதல் 44 ஆகியவை கிரையம் பெறப்பட்டது. 6, 7, 9, 26, 32 முதல் 35, 40, 42 மற்றும் 44 ஆகிய இனச்சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் பெயரில் இருந்தபோதும் அவை குடும்ப மேலாளர் என்ற முறையில் மூதாதையர் சொத்திலிருந்து வந்த வருமானத்தின் மூலம் 3ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்டதே ஆகும். அவையும் கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்ற அடிப்படையில்

சின்னராசுக்கவுண்டர் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் அனுபவித்து வரப்பட்டது. மேற்சொன்ன 3ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள நிலங்களில் இருந்து வந்த வருமானத்தையும் பொதுக்குடும்ப வருமானத்துடன் சேர்த்து பொதுக்குடும்ப நலனுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. தாவா 1, 10 முதல் 13, 16 முதல் 25, 31, 36, 37, 39 மற்றும் 41 ஆகிய இனச்சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டர் அடைந்தவை ஆகும். மேற்படி சொத்துக்கள் கூட்டுக்குடும்பச்சொத்துக்களாக அடைந்து அனுபவித்து வரப்பட்டது. தாவா "B" அட்டவணை சொத்துக்களும் பொதுக்குடும்பத்திற்குப் பாத்தியப்பட்டது. வாதியும், 2, 4, மற்றும் 5 பிரதிவாதிகளும் வெளியூர்களுக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டு அவர்களது கணவர்களுடன் வசித்து வந்தனர். 1, 3, மற்றும் 6 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதியின் தலைமையில் வழக்குச்சொத்துக்களை நிர்வகித்து வந்தனர். 3ம் பிரதிவாதி மேற்படி நிலங்களிலிருந்து வந்த வருமானத்தில் வாதி மற்றும் 2, 4, 5 பிரதிவாதிகளுக்கு உரிய பாகத்தை பணமாகக் கொடுத்து வந்தார். கடந்த ஒரு வருட காலமாக வாதிக்கு உரிய பங்குத்தொகையை கொடுக்காமல் இருந்து வந்தநிலையில் வாதி அவரது பாகத்தைக்கேட்டும் 3ம் பிரதிவாதி கொடுக்கவில்லை. எனவே வாதி 01.03.2006 அன்று 8/49 பாகம் கோரி சட்ட அறிவிப்பை அனுப்பினார். வாதி தவறுதலாக 8/49 பாகம் கோரி அறிவிப்பு நிலையில் தற்போது 1/7 பாகம் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார். சட்ட அறிவிப்பைப் பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் பதிலறிவிப்பு

எதுவும் கொடுக்கவில்லை. வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் பிரதிவாதி 21.06.2018 அன்று இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு வழக்குச்சொத்துக்களில் வாதிக்கு 1/6 பாகம் ஏற்பட்டுள்ளது. எனவே பாகப்பிரிவினை கோரியும், மகசூல் நஷ்டம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம் :-

வாதியின் வழக்கு பொய்யானது. வாதி வழக்குச் சொத்தை பிரதிவாதிகளுடன் சேர்ந்து அனுபவித்து வந்தார் என்பது பொய்யானது. வழக்குச் சொத்துக்களிலிருந்து கூடுதலான வருமானம் வந்ததாகவும், அந்த வருமானத்திலிருந்து மேற்கொண்டு நிலம் வாங்கப்பட்டது என்றும் கூறுவது தவறு. வழக்கு 6, 7, 9, 32, 33, 34, 42, 43, 44 இனச்சொத்துக்கள் மூதாதையர் சொத்திலிருந்து வந்த வருவாயைக்கொண்டு 3ம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டது என்பது பொய்யானது. 3ம் பிரதிவாதி அவரது மாமனார் வீட்டில் சீதனமாகக் கொடுத்த நகைகளையும், பணத்தையும் கொண்டு தன் பெயரில் மேற்படி சொத்துக்களை வாங்கியுள்ளார். எனவே மேற்படி சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். சின்னராசுக்கவுண்டர் உயிருடன் இருந்த காலத்தில் 3ம் பிரதிவாதி தாவா சொத்துக்களைப் பராமரித்து வந்தார் என்பதும் குடும்ப மேலாளர் என்ற முறையில் மூதாதையர் சொத்திலிருந்து வந்த வருவாயிலிருந்து 3ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம்

வாங்கினார் என்பதும் தவறு. தாவா சொத்திலிருந்து வந்த வருவாயினை 2, 4, 5 பிரதிவாதிகளுக்கு 3 ம் பிரதிவாதி கொடுத்து வந்தார் என்பது சரியல்ல. வாதிக்கு 60 பவுன் நகை போட்டு ரூ.1,00,000/-க்கு சீர்வரிசை செய்யப்பட்டுள்ளது. 3 ம் பிரதிவாதி குடும்ப அத்தியாவசிய செலவிற்காக மாணிக்கம், ராஜரத்தினம், ராஜேந்திரன், ஜீவானந்தம், சண்முகம் ஆகியோரிடம் கடன் பெற்றுள்ளார். வள்ளலார் கிராம வங்கியில் ரூ.1,55,600/-ம் திருக்கனூர் இந்தியன் வங்கியில் நகைக்கடன் ரூ.3,00,000/-மும், பாண்டிச்சேரி யூனியன் வங்கியில் ரூ.3,00,000/-மும் கடன் வாங்கப்பட்டுள்ளது. வாதிக்கு 1981 ம் ஆண்டு திருமணம் நடந்துள்ளது என்பதாலும் சின்னராசுக்கவுண்டர் 17 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டதாலும் இந்து வாரிசுரிமைச்சட்டப்படி பாகம் எதுவும் கிடைக்கத்தக்கது அல்ல. அவ்வாறு பாக உரிமை உண்டு என முடிவு செய்யம்பட்சத்தில் வாதி கடன்களில் அவரது பங்கை திருப்பிச்செலுத்த வேண்டும். மேலும் வாதி அவருக்கு கொடுத்த வரதட்சணை, நகை மற்றும் பணம் கிரகப்பிரவேச செலவு ரூ.50,000/-ம் செலவுகளையும் அவரது கடனின் பங்கை திருப்பிச் செலுத்தவேண்டும்.

4. **4 மற்றும் 5 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்:-**

வழக்குரையில் தெரிவித்துள்ளவாறு சின்னராசுக்கவுண்டருக்கு அ.வ.எண்.127/1953 என்ற வழக்கின் சமரச தீர்ப்பாணையில் "B" அட்டவணையாக

சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்பதும், சின்னராசுக்கவுண்டர் மற்றும் அவருடைய மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோர் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்பதும் உண்மை. 3 ம் பிரதிவாதி சின்னராசுக்கவுண்டர் உயிருடன் இருந்த காலத்திலேயே கூட்டுக்குடும்பத்தை மேலாளராக இருந்து கவனித்து பொதுக்குடும்பச்சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தில் 6, 7, 9, 32 முதல் 34, 42 முதல் 44 இனச்சொத்துக்களை குடும்ப நன்மைக்காக தன் பெயரில் கிரையம் பெற்றார் என்பதும் உண்மை. பொதுக்குடும்ப நிதியில் மேற்படி வருமானம் சேர்க்கப்பட்டது என்பதும் உண்மை. சின்னராசுக்கவுண்டர் பெயரில் 1, 10 முதல் 13, 16 முதல் 25, 31, 36, 37, 39 ஆகிய சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டதும் 3 ம் பிரதிவாதி, வாதி, 2, 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு உரிய விகிதாச்சாரத்தை கொடுத்து வந்ததாகச் சொல்வதும் கடந்த ஒரு வருடமாக மகசூலைக்கொடுக்க அவர் மறுத்துவிட்டதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. வழக்குச்சொத்துக்களில் 4, 5 பிரதிவாதிகளுக்கு தலா 1/7 பாகம் உள்ளது. 3 ம் பிரதிவாதி வழக்கு 42 ம் இனச்சொத்தில் 1.54 செண்ட் நிலத்தை 43, 44 இனச்சொத்துக்களையும் ஒரு ராமு, பேரின்பராஜ் ஆகியோருக்கு 12.08.2008 அன்று கிரையம் கொடுக்க அழைத்துச்சென்று விகிதாச்சார தொகையைக் கொடுப்பதாகச் சொல்லி அழைத்துச்சென்று நம்பவைத்து கிரையப்பத்திரத்தில் கையெழுத்து பெற்றுக்கொண்டு எவ்வித விகிதாச்சார தொகையும் கொடுக்காமல் மோசடி செய்துவிட்டார்கள். மேற்படி கிரைய ஆவணங்கள் மோசடியானது. ராமு மற்றும்

பேரின்பராஜ் ஆகியோர் வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள். வாதியுடன் 4,5 பிரதிவாதிகளுக்கும் தலா 1/7 பாகம் உள்ளது என தீர்ப்பாகவேண்டும்.

5. 6 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம் :-

சின்னராசுக்கவுண்டருக்கு அ.வ.எண்.127/1953 வழக்கில் ஏற்பட்ட சமாதான தீர்ப்பாணையில் "B" அட்டவணைச்சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது உண்மை. சின்னராசுக்கவுண்டர் மற்றும் அவரது இரண்டு மகன்களால் மேற்படி சொத்துக்கள் கூட்டாக வைத்து அனுபவித்து வரப்பட்டது. அவரது மகள்கள் கூட்டுக்குடும்பத்தின் உறுப்பினர்கள் அல்ல. சின்னராசுக்கவுண்டர் தான் குடும்பத்தையும், சொத்துக்களையும் நிர்வகித்து வந்தார். மேலும் அவர் அவரது மூத்த மகன் பெயருக்கு சொத்துக்களை கிரையம் பெற்றார். மூதாதையர் சொத்துக்கள் நீர்வளமுடைய வருமானம் கொடுக்கும் சொத்துக்களாக இருந்ததால் அந்த வருமானத்தை வைத்து 3 ம் பிரதிவாதியின் பெயரில் 6,7,9,26, 32 முதல் 35, 40, 42 முதல் 44 ஆகிய சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டது உண்மை. மேற்படி சொத்துக்களும், "B" அட்டவணைச் சொத்துக்களும் கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் ஆகும். 3 ம் பிரதிவாதி 16 வயதிலேயே தனியாக விவசாயம் செய்தார் என்று கூறுவதும் அவர் நிலங்களை போக்கியத்திற்குப் பெற்று அதில் விவசாயம் செய்தார் என்பதும் தவறு. மேலும் 3 ம் பிரதிவாதியின் மனைவி 100 பவுன் நகை வைத்திருந்ததாகக் கூறுவதும் அதனை வைத்து நிலங்கள் கிரையம் பெற்றதாகக் கூறுவதும் தவறு. சின்னராசுக்கவுண்டர்

முதுமையடைந்து விட்டதால் 3 ம் பிரதிவாதி குடும்பத்தையும், சொத்துக்களையும் நிர்வகித்து வந்தார். 3 ம் பிரதிவாதிக்கு தனியாக வருமானம் இருந்ததாகக் கூறுவது தவறு. 6 ம் பிரதிவாதி பி.இ., படித்து சவுதி அரேபியாவில் ஜனவரி 1999 முதல் ஜனவரி 2021 வரை பணிபுரிந்தார். அப்போது அவர் ஈட்டிய ரூ.5,00,000/- மதிப்புடைய தொகையானது 3 ம் பிரதிவாதிக்கு வங்கி மூலம் அனுப்பப்பட்டது. 3 ம் பிரதிவாதி அதனை தனது சொந்த நலனுக்கு பயன்படுத்திக்கொண்டார். சின்னராசுக்கவுண்டரின் மகள்களுக்கு தமிழ்நாடு அரசின் இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பே திருமணம் நடந்துவிட்டதாலும், சின்னராசுக்கவுண்டர் 19.12.1990 அன்றே இறந்துவிட்டதாலும் அவர்களுக்கு வழக்குச்சொத்துக்களில் பாகம் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல. 3 ம் பிரதிவாதி பல்வேறு கடன்கள் பெற்றுள்ளதாகக் கூறியுள்ளது தவறு. 3 ம் பிரதிவாதி 6 ம் பிரதிவாதியிடம் தனியாக வழக்கறிஞர் நியமிக்கவேண்டாம் என்றும், அவரே கவனித்துக் கொள்வதாகவும் கூறியதை 6 ம் பிரதிவாதி நம்பியிருந்தார். 20.07.2018 அன்று தான் 02.11.2007 அன்றே தான் தோன்றாத்தரப்பினராக அறிவிக்கப்பட்ட விவரம் 6 ம் பிரதிவாதிக்குத் தெரியவந்தது. 3 ம் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து 42 முதல் 44 வரையிலான இனச்சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ள நிலையில் சொத்துக்கள் அவருக்குத் தனிப்பட்டு பாத்தியம் என எதிர்வாதம் செய்வது முரண் கிடையாது. 40, 42, 43 மற்றும் 44 இனச்சொத்துக்கள் தவிர மீதச்சொத்துக்களை 2008 ம் ஆண்டு செப்டம்பர் முதல் சரிபாதியாகப் பிரித்து

அதில் பாதியை 6 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். பங்குரிமையர் என்ற அடிப்படையில் வழக்குச்சொத்தில் 6 ம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் உள்ளது. மேலும் அவரது தகப்பனாருக்குப் பிறகு அவரது சொத்தில் 1/21 பாகமும் சேர்த்து 8/21 பாகம் 6 ம் பிரதிவாதிக்கு உரியது ஆகும்.

6. மேற்படி பிராது, எதிர்வழக்குரை சங்கதிகளை கருத்தில் கொண்டு கீழ்கண்ட எழுவினாக்கள் விசாரணைக்காக வனையப்பட்டுள்ளது.

1. தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்பது சரியா?

2. தாவாவில் கோரியுள்ளபடி வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/7 பாகம் கிடைக்கக்கூடியதா?

3. தாவாவில் கோரியுள்ளபடி வாதிக்கு 1/7 பாகத்திற்கு முதல்நிலை திர்ப்பாணை கிடைக்கக்கூடியதா?

4. தாவாவில் கோரியுள்ளபடி எதிர்கால மகசூல் நஷ்டம் தனி மனு தாக்கல் செய்து கட்டளை 20 விதி 18 சிபிசி-யின்படி பெற வாதிக்கு தகுதியுண்டா?

5. தாவா சொத்துக்கள் 3 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்பது சரியா?

6. தாவா சொத்துக்களின் மதிப்பீடு சரியானதல்ல என்பது சரியா?

7. தாவாவில் வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

7. Additional Issues framed on 02.08.2010:-

1. 4, 5 பிரதிவாதிகள் தாவா சொத்தில் தலா 1/7 பாகம் (அதாவது 2/7) 3 ம் பிரதிவாதி பிரித்துக்கொடுக்க கடமைப்பட்டவர் என்று கூறுவது சரியா?

2. ராமு, பேரின்பராஜ் ஆகியோரை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று 4, 5 பிரதிவாதிகள் கூறுவது சரியா?

8. Additional Issues framed on 06.10.2015:-

1. தாவா சொத்துக்களில் 8/21 பாகத்திற்கு முதல்நிலை தீர்ப்பாணை தனக்கு கிடைக்கவேண்டியது என்று 6 ம் பிரதிவாதி கூறுவது சரியா?

9. மேற்கண்ட எழுவினாக்கள் வழக்கின் தன்மை கருதி பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகிறது.

1. தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்பது சரியா?

2. தாவாவில் கோரியுள்ளபடி வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/6 பாகம் கிடைக்கக்கூடியதா?

3. 3 ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்பது சரியா?

4. வேறு என்ன பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது?

10. இவ்வழக்கு விசாரணைக்கு இருந்த நிலையில் வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.32 வரையான

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு பின் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பில், 4 ம் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், 3 ம் பிரதிவாதி பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 மற்றும் மூ.த.சா.ஆ.1ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அபிலாஷ் என்பவர் பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். சந்திரன் என்பவர் பி.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு மூ.த.சா.ஆ.2 முதல் மு.த.சா.ஆ.4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. திரு.பாஸ்கரன் என்பவர் பி.சா.5 ஆக விசாரிக்கப்பட்டு மூ.த.சா.ஆ.5 முதல் மூ.த.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு சுப்புராயன் என்பவர் பி.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 6 ம் பிரதிவாதி பி.சா.7 ஆக விசாரிக்கப்பட்டு பின் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

11. மாற்றியமைக்கப்பட்ட எழுவினாக்கள் 1 முதல் 4 க்கான தீர்வு:-

11.1 வழக்குரை, எதிர்வழக்குரை இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. சின்னராசுக்கவுண்டர் என்பவருக்கு 1ம் பிரதிவாதி மனைவி என்றும், வாதியும், 2, 4 மற்றும் 5 பிரதிவாதிகளும் மகள்கள் என்றும், 3 மற்றும் 6 பிரதிவாதிகள் மகன்கள் என்றும், வழக்குரையில் உறவுமுறைகள் கூறப்பட்டுள்ளது. மேற்படி உறவுமுறைகள் பிரதிவாதிகள் தரப்பால் மறுக்கப்படவில்லை.

11.2 சின்னராசுக்கவுண்டருக்கு சமரச தீர்ப்பாணை மூலமாக தாவா 2 முதல் 5, 8, 14, 15, 27 முதல் 30 மற்றும் 38 இனச்சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதாக வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிக்கு ஆதரவாக வா.சா.ஆ.1 விழுப்புரம், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.177/1951 வழக்கின் சமரச தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது சின்னராசுக்கவுண்டரின் சகோதரர் பெருமாள்கவுண்டர் என்பரின் மனைவியால் தாக்கல் செய்யப்பட்டு அவ்வழக்கில் சமரச தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது என்றும், அதில் "A" பட்டியல் சொத்துக்கள் பெருமாள் கவுண்டருக்கும், "B" பட்டியல் சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலித்ததில் தெரியவருகிறது. அவ்வாறு சின்னராசுக்கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட "B" அட்டவணைச் சொத்துக்கள் தான் தாவா 2 முதல் 5, 8, 14, 15, 27 முதல் 29 மற்றும் 38 என தெரியவருகிறது. மேற்படி சங்கதி பிரதிவாதிகள் தரப்பால் மறுக்கப்படவில்லை.

11.3 சின்னராசுக்கவுண்டர் உயிருடன் இருந்தபோதே 3 ம் பிரதிவாதி குடும்ப மேலாளர் என்ற அடிப்படையில் மேற்சொன்ன சொத்துக்களை நிர்வகித்து வந்ததாகவும், அந்தச் சொத்துக்கள் நீர்வளமுடைய செழிப்பான நிலங்கள் என்பதால் அதில் வந்த மிகை வருமானத்தைக்கொண்டு 3 ம் பிரதிவாதி அவரது பெயரில் தாவா 6, 7, 9, 32 முதல் 34, 42 முதல் 44 ஆகிய சொத்துக்களைக் கிரையம்

பெற்றார் என வாதி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

11.4 வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தைப் பரிசீலித்ததில் 3ம் பிரதிவாதி பெரியண்ணன் 7 மற்றும் 9 இனச்சொத்துக்களை கடந்த 19.03.1979 அன்று கிரையம் பெற்றுள்ளார் என்றும், வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தைப் பரிசீலித்ததில் 3ம் பிரதிவாதி 32, 33, 34, 35 ஆகிய சொத்துக்களை கடந்த 19.09.1977 அன்று கிரையம் பெற்றுள்ளார் என்றும், வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தைப் பரிசீலித்ததில் 3ம் பிரதிவாதி 12.08.1980 அன்று தாவா 44ம் இனச்சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றும், வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்தைப் பரிசீலித்ததில் 06.07.1983 அன்று 3ம் பிரதிவாதி தாவா 42ம் இனச்சொத்தைக் கிரையம் பெற்றுள்ளார் என்றும், வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தைப் பரிசீலித்ததில் 01.04.1985 அன்று 3ம் பிரதிவாதி தாவா 26ம் இனச்சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றும் தெரியவருகிறது. மேலும் தாவா 6, 7, 9, 17 முதல் 25, 42 முதல் 44 இனச்சொத்துக்களுக்கு 3ம் பிரதிவாதி பெரியண்ணன் பெயரில் பட்டா இருப்பது வா.சா.ஆ.11 முதல் 13 வரையிலான பட்டா ஆவணங்களைப் பரிசீலித்ததில் தெரியவருகிறது. இவ்வாறாக பெரியண்ணன் பெயரில் 6, 7, 9, 17 முதல் 26, 32 முதல் 35, 42 முதல் 44 இனச்சொத்துக்களுக்கு ஆவணங்கள் இருப்பது தெளிவாகிறது.

11.5 வாதியின் வழக்குரையில் சின்னராசுக்கவுண்டர் தாவா 1, 10 முதல் 13, 16 முதல் 25, 31, 36, 37, 39 மற்றும் 41 ஆகிய இனச்சொத்துக்களை அடைந்துள்ளதாக

தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் 17 முதல் 25 இனச்சொத்துக்கள் பெரியண்ணன் பெயரில் தான் பட்டா ஏற்பட்டுள்ளதே தவிர சின்னராசுக்கவுண்டர் பெயரில் மேற்படி சொத்துக்களுக்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. வா.சா.ஆ.3 11.09.1964 தேதியிட்ட கிரைய ஆவணத்தைப் பரிசீலித்ததில் சின்னராசுக்கவுண்டர் தாவா 10 மற்றும் 11 இனச்சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என தெரியவருகிறது. மேலும் வா.சா.ஆ.10 சின்னராசுக்கவுண்டர் பெயரில் உள்ள பட்டாவை பரிசீலித்ததில் தாவா 2, 3, 4, 8, 15, 16, 27, 28, 29, 30, 31 மற்றும் 41 ஆகிய இனச்சொத்துக்களுக்கு சின்னராசுக்கவுண்டர் பெயரில் பட்டா இருப்பதும் தெரியவருகிறது. மேலும் தாவா 1ம் இனச்சொத்திற்கு எவ்வித ஆவணமும் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. இவ்வாறான நிலையில் தாவா 1ம் இனச்சொத்து சின்னராசுக்கவுண்டருக்கு பாத்தியம் என்பதை வாதி தரப்பில் நிரூபிக்கவில்லை.

11.6 மேலும் தாவா 12 மற்றும் 13 இனச்சொத்துக்கள் என்பவை சர்வே எண்.205/4 ல் புஞ்சை ஏக்கர் 1.47 செண்ட்டில் ஏக்கர் 0.47 மற்றும் 0.32 செண்ட் விஸ்தீரணம் உடையவை ஆகும். மேலும் மேற்படி சொத்து விபரமானது நான்கெல்லையுடன் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 12 மற்றும் 13 இனச்சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டருக்குப் பாத்தியம் எனக் குறிப்பிட்டுள்ள வாதி தரப்பு உரிமை மூல ஆவணங்கள் எதனையும் இதுகுறித்து தாக்கல் செய்யவில்லை. சின்னராசுக்கவுண்டர் பெயரில் உள்ள வா.சா.ஆ.10

பட்டா ஆவணத்திலும் சர்வே எண்.205/4 சி-யில் 0.7.50 ஏர்ஸ் விஸ்தீரணை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 7.50 ஏர்ஸ் என்பது சுமார் 18 செண்ட் விஸ்தீரணம் ஆகும். 12 மற்றும் 13 இனச்சொத்துக்களைச் சேர்த்து சர்வே எண்.205/4 ல் 79 செண்ட் விஸ்தீரணத்திற்கு உரிமை கோரும் வாதி தரப்பு 18 செண்ட் விஸ்தீரணத்திற்கு மட்டும் பட்டா ஆவணத்தை தாக்கல் செய்துள்ள நிலையில், தாவா 12, 13 இனச்சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டருக்கு பாத்தியம் என்பதை நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11.7 மேலும் தாவா 39 ம் இனச்சொத்து சின்னராசுக்கவுண்டருக்கு பாத்தியம் என்பதற்கும் வாதி தரப்பு ஆவணங்களைத் தாக்கல் செய்யாததால் மேற்படி சொத்தும் சின்னராசுக்கவுண்டருக்குப் பாத்தியம் என்பதை வாதி தரப்பு நிரூபிக்கவில்லை. இவ்வாறாக தாவா 1, 12, 13, 39 இனச்சொத்துக்கள் தொடர்பாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யாததால் மேற்படி சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டருக்குப் பாத்தியம் என்பதை வாதி தரப்பு நிரூபிக்கவில்லை. வா.சா.ஆ.1 சமரச தீர்ப்பாணை வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் மற்றும் வா.சா.ஆ.10 சின்னராசுக்கவுண்டர் பெயரில் உள்ள பட்டா ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் தாவா 2 முதல் 5, 8, 10, 11, 14, 15, 16, 27 முதல் 30, 31, 38, 41 ஆகிய சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டருக்கு பாத்தியம் என்பதை வாதி தரப்பு நிரூபித்துள்ளது. தாவா 1, 12, 13, 39 ஆகிய இனச்சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டருக்கு பாத்தியம் என்று சொல்வதை வாதி தரப்பு

நிரூபிக்கவில்லை.

11.8 தாவா 36 மற்றும் 37 இனச்சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டருக்கு பாத்தியம் என சொல்லப்பட்டுள்ளதற்கு ஆதரவாக வாதி தரப்பு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மாறாக 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தாவா 36 மற்றும் 37 இனச்சொத்துக்களை கடந்த 06.07.1998 தேதியன்று முருகேசக்கவுண்டர் என்பவருக்கு கிரையம் கொடுத்த ஆவணம் மட்டும் வா.சா.ஆ.30 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தைப் பரிசீலித்ததில் தாவா 36 மற்றும் 37 இனச்சொத்துக்கள் 06.07.1998 அன்றே கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. காலம் கடந்த நிலையில் மேற்படி சொத்துக்களின் மீது வாதி பாகப்பிரிவினை கோரியுள்ளது ஏற்கத்தகுந்தது அல்ல. மேலும் வாதியானவர் அவ்வாறான கிரையம் பெற்ற முருகேசக்கவுண்டர் என்பவரை தரப்பினராக சேர்க்கவும் இல்லை. மேலும் வாதி தனது வழக்குரையில் 36 மற்றும் 37 இனச்சொத்துக்கள் 3 மற்றும் 6 பிரதிவாதிகளால் கிரையம் கொடுக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவிக்கவில்லை என்பதோடு அவ்வாறான கிரையம் குறித்து வாதி எவ்வித வினாவும் எழுப்பவில்லை. எனவே வாதிக்கு 36 மற்றும் 37 இனச்சொத்துக்களில் பாகப்பிரிவினை எதுவும் கிடைக்கத்தக்கது அல்ல. சின்னராசுக்கவுண்டருக்கு 1, 12, 13, 39 ஆகிய இனச்சொத்துக்கள் பாத்தியம் என்பதை நிரூபிக்காததால் வாதிக்கு மேற்படி சொத்துக்களிலும் பாகப்பிரினை கிடைக்கத்தக்கது அல்ல.

11.9 இவ்வாறாக 1, 12, 13, 36, 37, 39 ஆகிய இனச்சொத்துக்களில் வாதிக்கு பாகப்பிரிவினை எதுவும் கிடைக்கத்தக்கது அல்ல. சின்னராசுக்கவுண்டர், வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தாத நிலையில் கடந்த 19.12.1990 அன்று இறந்துவிட்டார் என்பது வா.சா.ஆ.15 இறப்புச்சான்றிதழைப் பரிசீலித்ததில் இருந்தும் வழக்குச் சங்கதிகளிலிருந்தும் தெரியவருகிறது. 1ம் பிரதிவாதி வாதி மற்றும் 2 முதல் 6 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். இவ்வாறான நிலையில் வாதி மற்றும் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சின்னராசுக்கவுண்டருக்குச் சொந்தமான தாவா 2 முதல் 5, 8, 10, 11, 14, 15, 16, 27 முதல் 30, 31, 38, 41 சொத்துக்களில் தலா 1/6 பாகம் கிடைக்கத்தக்கது.

11.10 வாதி தரப்பில் சின்னராசுக்கவுண்டருக்கு வா.சா.ஆ.1 சமரசத் தீர்ப்பாணை மூலம் கிடைத்த சொத்துக்களை பொதுக்குடும்பச் சொத்துக்களாக அனுபவித்து வந்தனர் என்றும், மேற்படி சொத்துக்களை சின்னராசுக்கவுண்டர் உயிருடன் இருந்தபோதே 3ம் பிரதிவாதி குடும்ப மேலாளர் என்ற அடிப்படையில் நிர்வாகம் செய்து வந்தார் என்றும், அவ்வாறான சொத்துக்களையும் சின்னராசுக்கவுண்டர் அடைந்த பின்பு 1, 10 முதல் 13, 16 முதல் 25, 31, 36, 37, 39 மற்றும் 41 ஆகிய இனச்சொத்துக்களையும் ஒன்றாக வைத்து அவற்றின் வருமானங்களை கூட்டுக்குடும்ப நிதியாக பயன்படுத்தப்பட்டு வந்தது என்றும், அந்த நிதியிலிருந்து 3ம் பிரதிவாதி அவரது பெயரில் 6,7,9,26, 32 முதல் 35, 40, 42

மற்றும் 44 ஆகிய இனச்சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றும் தெரிவித்து வாதிடப்பட்டது.

11.11 3 ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி சங்கதி மறுக்கப்பட்டுள்ளது. சின்னராசுக்கவுண்டர் உயிருடன் இருக்கையில் 3 ம் பிரதிவாதி மேற்படி குடும்பத்தின் கர்த்தா அல்ல என்றும், அவர் Junior Member என்றும், அவர் எப்போதும் கூட்டுக்குடும்ப மேலாளராக இருக்கவில்லை என்றும், சின்னராசுக்கவுண்டர் 1990 ம் ஆண்டு இறப்பதற்கும் 1-1/2 ஆண்டுகள் முன்புவரை நல்ல நிலையில் இருந்து மேற்படி கூட்டுக்குடும்பத்தின் கர்த்தாவாக இருந்து நிர்வகித்து வந்தார் என்றும், 3 ம் பிரதிவாதி அவரது சொந்த முயற்சியால் சம்பாதித்த வருமானத்தைக்கொண்டு கிரையம் பெற்ற சொத்துக்களில் வாதி உரிமை கொண்டாட முடியாது என்றும் தெரிவித்து வாதிடப்பட்டது.

11.12 மேலும் 3 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துமூலமான வாதுரையில் 1979, 1975, 1980, 1983, 1985 ஆகிய காலக்கட்டங்களில் அதாவது சின்னராசுக்கவுண்டர் 1990 ம் ஆண்டு இறப்பதற்கு முன்பாகவே 3 ம் பிரதிவாதியானவர் அவரது பெயருக்கு சுயமாக சொத்துக்களைக் கிரையம் பெற்றார் என்றும், சின்னராசுக்கவுண்டர் சொத்துக்கள் தொடர்பாக கிரையம் பெறுவது விற்பனை செய்வது மற்றும் அடமானங்கள் ஏற்படுத்துவது ஆகியவற்றை தனியாக மேற்கொண்டு வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சின்னராசுக்கவுண்டர் தனியாக கிரையங்கள் பெற்றார் என்பதற்கு ஆதரவாக

வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.22 ஆகிய கிரைய ஆவணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 11.09.1964 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் மூலம் சின்னராசுக்கவுண்டர் தாவா 10 மற்றும் 11 இனச்சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

11.13 அதேபோல் வா.சா.ஆ.21, அடமானக்கடன் பத்திரம் வா.சா.ஆ.22 கிரைய ஆவணம், வா.சா.ஆ.23, 24, 25, 26, 27 ஆகிய அடமானக்கடன் பத்திரங்கள் வா.சாஆ.28 போக்கியப்பத்திரம் மற்றும் வா.சா.ஆ.29 அடமானக்கடன் மேடொவர் பத்திரம் ஆகிய ஆவணங்களை பரிசீலித்ததில் சின்னராசுக்கவுண்டர் அவரது பெயருக்கு அடமானங்கள் பெற்றும், கிரையங்கள் பெற்றும், கிரையம் கொடுத்தும், போக்கியப்பத்திரங்கள் பெற்றும் தனியாக சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்துள்ளார் எனத் தெரியவருகிறது. அவ்வாறிருக்க 3 ம் பிரதிவாதி தான் சொத்துக்களை குடும்ப மேலாளராக இருந்து நிர்வகித்து வந்தார் எனக்கூறுவதையும், 3 ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் பொதுக்குடும்ப நிதியிலிருந்து கிரையம் பெறப்பட்டவை எனக்கூறுவதையும் சின்னராசுக்கவுண்டருக்கு பாகப்பிரிவினையில் கிடைத்த நிலங்களில் இருந்து வந்த வருமானமானது குடும்பத்தேவைக்கும் அதிகமாக வளம் கொழிக்கும் பூமியாக இருந்தது என்பதையும் அதிலிருந்து வந்த மிகை வருமானத்தை வைத்து சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதையும் வாதியே நிரூபிக்கவேண்டும்.

11.14 **வாதி/வா.சா.1** தனது குறுக்கு விசாரணையில்

" என் தந்தை 90 வயதில் இறந்தார். ஒன்னரை வருடம் கேன்சர் நோய் ஏற்பட்டு பின்னர் இறந்தார். என் தந்தை பயிர் வேலைக்கு செல்வார். ஒருவாகாலம் தான் படுத்த படுக்கையாகிவிட்டார். பின்னர் இறந்துவிட்டார்."

"இந்த சொத்தில் எவ்வளவு வருமானம் வந்தது என்பது குறித்து கணக்கு வழக்கு உள்ளதா என்றால் எழுத்துப்பூர்வமாக இல்லை."

"1972 ல் என் அண்ணன் பெருமாள் கவுண்டரிடமிருந்து 3 ஏக்கர் 33 செண்ட் போக்கியத்திற்கு எடுத்தார் என்றால் சரி. அந்த போக்கியப்பத்திரம் என் அண்ணன் பெயரில்தான் பணத்தை கொடுத்து ஏற்பாடு செய்தவர் என் தந்தை. நான் எந்த வருடம் பிறந்தேன் என்று நினைவில்லை. எனக்கு வயது 46. அந்த போக்கியம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1972 ல் நான் கைகுழந்தை என்றும், எனக்கு நினைவில்லை என்றால் இருக்கலாம்."

என்றும் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். வா.சா.1 செல்வி 2013 ம் ஆண்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது அவருக்கு வயது 46 எனத் தெரிவித்துள்ளார். அவ்வாறிருக்க அவர் 1972 அல்லது 1973 ம் ஆண்டுகளில் அவர் சிறு குழந்தையாகவே இருந்திருப்பார். இவ்வாறான நிலையில் 1972 ம் ஆண்டு 3 ஏக்கர் 33 செண்ட் நிலத்தை 3 ம் பிரதிவாதி குத்தகைக்கு எடுத்தபோது சின்னராசுக்கவுண்டர்தான் 3 ம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார் என

ஆதாரமின்றி வாதியானவர் தெரிவித்துள்ளார். மேலும் வாதி எந்த சொத்துக்களிலிருந்து எத்தகைய வருமானம் வந்தது என்பதற்கு எவ்வித ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை. மேலும் சின்னராசுக்கவுண்டர் 1990 ம் ஆண்டு இறப்பதற்கும் 1-1/2 ஆண்டுகள் முன்புவரை நல்ல நிலையில் இருந்து வந்துள்ளார் என்றும், அவர் இறுதிவரை விவசாயம் செய்து வந்துள்ளார் என்றும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

11.15 3 ம் பிரதிவாதி தரப்பில் 3 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துக்களும், பொதுக்குடும்பச்சொத்துக்களுடன் கலந்து அனுபவித்து வரப்பட்டது என்று கூறுவதை வாதி தரப்பே சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவேண்டும் என்று தெரிவித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் ***(2024) 0 Supreme (Mad) 768, Govindammal and Others..Vs..Anjugam and others.*** என்ற தீர்ப்புரையில்

"***Therefore, in respect to the claim of blending, first there have to be necessary pleadings to that effect and it has to be established that the self acquired property has been voluntarily thrown by the owner into the common stock with the intention of abandoning his separate claim and such intention must be proved, in the absence of any of these evidence, it cannot be taken that the suit property is a joint family property by blending.***" என்று தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டி

வாதிடப்பட்டது. மேற்படி தீர்ப்புரையின்படி 3ம் பிரதிவாதி அவரால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களை தானாக முன்வந்து பொதுச்சொத்துக்களுடன் கலந்து அனுபவிக்கும் எண்ணத்துடனும், மேற்படி சொத்துக்களின் மீது தனது தனி உரிமையை விட்டுவிடும் எண்ணத்துடனும் செயல்பட்டார் என்பதையும் வாதி தரப்பே நிரூபிக்கவேண்டும். 3ம் பிரதிவாதி அவரால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களை பொதுக்குடும்பச் சொத்துக்களுடன் கலந்து அனைவராலும் மேற்படி சொத்துக்கள் அனுபவித்து வரப்பட்டது என்பதையோ 3ம் பிரதிவாதி அவரால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களின் மீது அவருக்குள்ள தனி உரிமையை விட்டுவிடும் எண்ணத்தில் செயல்பட்டார் என்பதையோ வாதி தரப்பு நிரூபிக்கவில்லை.

11.16 தாவா 42, 43, 44 இனச்சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் பெறப்பட்ட போதும் அவற்றை 3ம் பிரதிவாதியும் அவரது சகோதர சகோதரிகள் அனைவரும் சேர்ந்தே கிரையம் கொடுத்ததாகவும், 3ம் பிரதிவாதி/பி.வா.சா.2 பெரியண்ணனை குறுக்கு விசாரணை செய்தபோது கேள்விகள் கேட்கப்பட்டு அவரும் அதனை ஒத்துக்கொண்டுள்ளார். சொத்துக்களைக் கிரையம் கொடுக்கும்போது கிரையம் பெறும் நபர் கேட்டுக்கொண்டதற்காக குடும்பத்தில் உள்ள மற்றவர்களும் கிரைய ஆவணத்தில் கையொப்பமிடுவது என்பது பின்னால் ஏற்படும் சிக்கல்களை தவிர்ப்பதற்காக கையாளப்படும் ஒரு நடைமுறை ஆகும். அவ்வாறு கிரைய

ஆவணத்தில் 3ம் பிரதிவாதியுடன் தாங்களும் சேர்ந்து கிரையம் கொடுத்ததால் மட்டுமே 3ம் பிரதிவாதி கிரையம் பெற்ற அனைத்து சொத்துக்களிலும் அவரது சகோதர சகோதரிகள் அனைவருக்கும் உரிமை ஏற்பட்டுவிட்டதாகக் கருதிக்கொள்ள இயலாது.

11.17 ஏற்கனவே விவாதித்தவாறு வா.சா.ஆ.1 சமரச தீர்ப்பாணை மூலம் சின்னராசுக்கவுண்டருக்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்களும், சின்னராசுக்கவுண்டருக்கு கிரையம் மற்றும் பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களும் வளம் கொழிக்கும் பூமிகள் என்பதற்கு எவ்வித தனிப்பட்ட சாட்சியங்களையோ ஆவணங்களையோ வாதி தரப்பு தாக்கல் செய்யவில்லை. மேற்படி சொத்துக்களிலிருந்து எத்தகைய வருமானம் வந்தது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. மேலும் ஏற்கனவே விவாதித்தவாறு வாதியானவர் சின்னராசுக்கவுண்டர் மற்றும் 3ம் பிரதிவாதி கிரையங்கள் பெற்ற காலக்கட்டத்தில் இளவராகவே இருந்துள்ளார். அவ்வாறிருக்க வாதியின் வாய்மொழி சாட்சியத்தினை மட்டும் வைத்து மேற்படி சின்னராசுக்கவுண்டரின் சொத்துக்களிலிருந்து மிகை வருமானம் வந்தது என்றும், அவ்வாறான மிகை வருமானத்தை வைத்தே 3ம் பிரதிவாதியின் பெயரில் கிரையங்கள் பெறப்பட்டது என்பதையும் அவ்வாறான சொத்துக்களையும் மற்ற சொத்துக்களுடன் வைத்து பொதுவில் அனுபவித்து வரப்பட்டது என்பதையும் வாதி தரப்பு நிரூபிக்கவில்லை.

11.18 3ம் பிரதிவாதி தான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குடும்ப நலனுக்காக மாணிக்கம், ராஜரத்தினம், ராஜேந்திரன், ஜீவானந்தம், சண்முகம் ஆகியோரிடம் கடன் பெற்றுள்ளதாகவும், வள்ளலார் கிராம வங்கியில் ரூ.1,55,600/- கடன் பெற்றுள்ளதாகவும், திருக்கனூர் இந்தியன் வங்கியில் நகைக்கடன் ரூ.3,00,000/-மும், பாண்டிச்சேரி யூனியன் வங்கியில் ரூ.3,00,000/-மும் கடன் பெறப்பட்டுள்ளது என்றும், வாதியானவர் கடன்களில் அவரது பங்கை செலுத்த வேண்டும் என்றும், தெரிவித்துள்ளார். 3ம் பிரதிவாதி தரப்பில் அவர் பயிர்க்கடன்கள், நகைக்கடன்கள் மற்றும் வீட்டுக்கடன் பெற்றுள்ளதற்கான வங்கிக்கணக்கு ஆவணங்கள் சாட்சிகள் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களின் மூலம் அவர் கடன் பெற்றுள்ளது நிரூபணம் ஆகியுள்ளதே தவிர அந்த கடன் தொகைகளை அவர் பொதுக்குடும்ப நலனுக்காகவோ, பொதுக்குடும்பச்சொத்துக்களின் மேம்பாட்டுக்காகவோ செலவு செய்தார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. இவ்வாறான நிலையில் 3ம் பிரதிவாதி அவரது குடும்ப/தொழில் நலனுக்காக தனிப்பட்ட முறையில் கடன் பெற்றுள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே கடன் தொகைகளில் வாதி அவரது பங்கை செலுத்த வேண்டும் என 3ம் பிரதிவாதி தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல.

11.19 6ம் பிரதிவாதி தமிழ்மாறன் என்பவர் தரப்பில் தமிழ்நாடு அரசின் இந்து

வாரிசுரிமை திருத்தச்சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாகவே சின்னராசுக்கவுண்டரின் மகள்களுக்கு திருமணம் நடந்துவிட்டது என்றும், சின்னராசுக்கவுண்டர் 19.12.1990 அன்றே இறந்துவிட்டதாலும் பாகம் எதுவும் கிடைக்கக்கூடியது அல்ல என எதிர்வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கருத்துக்கள் அனைத்தும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் ***Vinitha Sharma..Vs..Rakesh Sharma*** என்ற தீர்ப்பின் மூலம் மாற்றியமைக்கப்பட்டு இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் 2005 ன் படி தகப்பனார் எப்போது இறந்தார் என்பது வாரிசுரிமைக்கான நிபந்தனை அல்ல என்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது. அவ்வாறிருக்க 6 ம் பிரதிவாதி தரப்பில் முன்வைக்கபட்டுள்ள வாதங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

11.20 இவ்வாறான நிலையில் 3 ம் பிரதிவாதி பட்டா மற்றும் கிரைய ஆவணங்கள் மூலம் அடைந்துள்ள தாவா 6, 7, 9, 17 முதல் 26, 32 முதல் 35, 42 முதல் 44, இனச் சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது அல்ல. ஏற்கனவே விவாதித்தவாறு சின்னராசுக்கவுண்டருக்கு பாத்தியம் என நிரூபிக்காத காரணத்தால் 1, 12, 13, 36, 37, 39 இனச்சொத்துக்களிலும் பாகப்பிரிவினைப் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல.

11.21 ஆகவே சின்னராசுக்கவுண்டருக்கு வா.சா.ஆ.1 சமரச தீர்ப்பாணை மூலமாகவும், கிரையம் மற்றும் பட்டா ஆவணங்களின் மூலமாகவும்

கிடைத்துள்ள தாவா "A" அட்டவணை 2 முதல் 5, 8, 10, 11, 14, 15, 16, 27 முதல் 30, 31, 38, 41 இனச்சொத்துக்களில் வாதி மற்றும் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு தலா 1/6 பாகம் இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தாவா "A" அட்டவணை 2 முதல் 5, 8, 10, 11, 14, 15, 16, 27 முதல் 30, 31, 38, 41 இனச்சொத்துக்களில் வாதிக்கு அவர் கோரியவாறு 1/6 பாகம் கிடைக்கத்தக்கது. 4, 5 பிரதிவாதிகள் தங்களது பாகத்திற்காக நீதிமன்றக்கட்டணம் செலுத்தியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

11.22 தாவா "B" அட்டவணைச் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ள டிராக்டர் மற்றும் Cultivator ஆகியவற்றைப் பொறுத்தவரை ஆவணங்கள் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறான சொத்துக்கள் சின்னராசுக்கவுண்டர் பெயரில் இருப்பது நிரூபிக்கப்படாததால் மேற்படி "B" அட்டவணைச் சொத்துக்களைப் பொறுத்தவரை எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக,

1. தாவா "A" அட்டவணை 2 முதல் 5, 8, 10, 11, 14, 15, 16, 27 முதல் 31, 38, 41 இனச்சொத்துக்களில் வாதிக்கு 1/6 பாகம் வழங்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும்,

2. தாவா "A" அட்டவணை 1, 6, 7, 9, 12, 13, 17 முதல் 26, 32 முதல் 37, 39, 40, 42, 43, 44 இனச்சொத்துக்களைப் பொறுத்தும், தாவா "B" அட்டவணைச்

சொத்துக்களைப் பொறுத்தும் தாவா தள்ளுபடி செய்தும்,

3. மகசூல் நஷ்டம் குறித்து தனியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வாதிக்கு அனுமதி வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

4. தரப்பினர்களின் உறவுமுறை கருதி செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 29.07.2026 புதன்கிழமை ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2026.07.31 18:17:01 +0530

முதன்மை சார்பு நீதிபதி,

விழுப்புரம்.

வாதி தரப்பு சாட்சியங்கள்:-

வா.சா.1 திருமதி. செல்வி க/பெ. கஜபதி

வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் விபரம் :-

வா.சா.ஆ 1.	28.10.1952	மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், விழுப்புரம் அசல் வழக்கு எண்.127/1953 ன் தீர்ப்பாணை பதிவு செய்யப்பட்ட சான்றிட்ட நகல்
வா.சா.ஆ 2.	19.03.1979	பெரியண்ணகவுண்டருக்கு, தையல்நாயகி அம்மாள் மற்றும் காளியம்மாள் ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் அசல்

வா.சா.ஆ 3.	11.09.1964	சின்னராஜிக்கவுண்டருக்கு, மூர்த்தி எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் அசல்
வா.சா.ஆ 4	19.09.1977	பெரியண்ணக்கவுண்டருக்கு, தேவராஜ் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் அசல்
வா.சா.ஆ 5	12.08.1980	சின்னதம்பி அவர்களுக்கு பெரியண்ணக்கவுண்டர் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் அசல்
வா.சா.ஆ 6	22.07.1983	பெரியண்ணக்கவுண்டருக்கு முருகேசன் மற்றும் பலர் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் அசல்
வா.சா.ஆ 7	06.07.1983	வனஜா அவர்களுக்கு பெரியண்ணக்கவுண்டர் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் அசல்
வா.சா.ஆ 8	29.10.1984	சின்னராசுக்கவுண்டர் விழுப்புரம் கூட்டுறவு வங்கிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமானக்கடன்பத்திரம் அசல்
வா.சா.ஆ 9	01.04.1985	பெரியண்ணக்கவுண்டருக்கு ரத்தினாம்பாள் அவர்கள் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் அசல்
வா.சா.ஆ 10	15.02.2006	கணினி பட்டா எண்.225
வா.சா.ஆ 11	16.02.2006	கணினி பட்டா எண்.452
வா.சா.ஆ 12	16.02.2006	கணினி பட்டா எண்.

வா.சா.ஆ 13	22.02.2006	கணினி பட்டா எண்.710
வா.சா.ஆ 14	01.03.2006	வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு
வா.சா.ஆ 15	14.09.2006	சின்னராசுக்கவுண்டரின் இறப்பு சான்றிதழ் அசல்
வா.சா.ஆ 16	--	1 ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புதல் அட்டை
வா.சா.ஆ 17	--	3 ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புதல் அட்டை
வா.சா.ஆ 18	--	4 ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புதல் அட்டை
வா.சா.ஆ 19	--	5 ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புதல் அட்டை
வா.சா.ஆ 20	--	6 ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புதல் அட்டை
வா.சா.ஆ 21	10.09.1958	பெரியண்ணக்கவுண்டர், சின்னராசுக் கவுண்டருக்கு எழுதிக்கொடுத்த அடமானக்கடன் பத்திரம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ 22	26.07.1962	சின்னராசுக்கவுண்டருக்கு, கோவிந்தசாமி மற்றும் பலர் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ 23	29.07.1962	கிருஷ்ணம்மாள் மற்றும் பலர், சின்னராசுக் கவுண்டருக்கு எழுதிக்கொடுத்த அடமானக்கடன் பத்திரம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ 24	29.08.1962	சின்னராசுக்கவுண்டருக்கு, சீனன் அவர்கள் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமானக்கடன்பத்திரம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ 25	19.10.1964	சின்னராசுக்கவுண்டருக்கு, சின்னதம்பி மற்றும் பலர் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமானக்கடன்பத்திரம் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ 26	06.07.1970	காசாம்பு அம்மாளுக்கு, சின்னராசுக் கவுண்டர் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ 27	27.06.1971	சின்னராசுக்கவுண்டருக்கு, பவுனாம்பாள் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமானக்கடன்பத்திரம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ 28	04.03.1972	சின்னராசுக்கவுண்டருக்கு, பெரியண்ணக் கவுண்டர் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட போக்கியப்பத்திரம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ 29	15.05.1973	சின்னராசுக்கவுண்டருக்கு, கணேசன் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமானக்கடன் மேடோவர் பத்திரம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ 30	06.07.1998	முருகேசக்கவுண்டருக்கு, பெரியண்ணன் மற்றும் தமிழ்மாறன் ஆகியோா் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் அசல்
வா.சா.ஆ 31	01.12.2004	துரைராஜ் அவர்களுக்கு, பெரியண்ணன் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விற்கிரையப்பத்திரம் அசல்
வா.சா.ஆ 32	12.08.2008	பேரின்பராஜ் அவர்களுக்கு, பெரியண்ணன், தமிழ்மாறன் ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த விற்கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்

பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :-

பி.சா.1 - திருமதி. மல்லிகா க/பெ. நடராஜன்

பி.சா.2 - திரு. பெரியண்ணன் த/பெ.சின்னராசு

பி.சா.3 - திரு. அபிலாஷ் த/பெ. தங்கப்பன்

பி.சா.4 - திரு. சந்திரன் த/பெ. பாலசுப்ரமணியன்

பி.சா.5 - திரு. பாஸ்கரன் த/பெ. கிருஷ்ணமூர்த்தி

பி.சா.6 - திரு. சுப்புராயன் த/பெ. பாவாடை

பி.சா.7 - திரு. தமிழ்மாறன் த/பெ. சின்னராசு

பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :-

பி.வா.சா.ஆ 1.	04.03.1972	3ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள போக்கியப்பத்திரம்

மூன்றாம் தரப்பினர் சான்றாவணங்கள் :-

மூ.த.சா.ஆ 1.	--	யூனியன் வங்கியில் 3ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள வங்கி கணக்கு பட்டியல்
மூ.த.சா.ஆ 2	--	பெரியண்ணன் பெயரில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் உள்ள கடன் பேரேடு
மூ.த.சா.ஆ 3	--	பெரியண்ணன் பெயரில் உள்ள லெட்ஜர் எக்ஸ்ட்ராக்ட்
மூ.த.சா.ஆ 4	--	பெரியண்ணன் பெயரில் உள்ள குறுகிய கால கடன் பேரேடு
மூ.த.சா.ஆ 5	--	இந்தியன் வங்கியில் பெரியண்ணன் பெயரில் உள்ள வங்கி கணக்கு பட்டியல்
மூ.த.சா.ஆ 6	--	இந்தியன் வங்கியில் பெரியண்ணன் பெயரில் உள்ள வங்கி கணக்கு பட்டியல்

மூ.த.சா.ஆ 7	--	இந்தியன் வங்கியில் பெரியண்ணன் பெயரில் உள்ள வங்கி கணக்கு பட்டியல்
மூ.த.சா.ஆ 8	--	இந்தியன் வங்கியில் பெரியண்ணன் பெயரில் உள்ள வங்கி கணக்கு பட்டியல்

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.07.31 18:17:11 +0530

முதன்மை சார்பு நீதிபதி,

விழுப்புரம்.